## 27.3 2006–2007 – சிறந்த 15 ஊராட்சிகளுக்கு உத்தமர் காந்தி விருது வழங்கும் திட்டம்

ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி (சி2) துறை

அரசாணை (நிலை) எண்.111 நாள் : 5.9.2006

படிக்க :

1. அரசாணை (நிலை) எண். 82, ஊரக வளர்ச்சி துறை நாள் 16.7.2003
2. ஊரக வளர்ச்சி (மற்றும்) ஊராட்சி இயக்குநரின் கடிதம் எண்.25942/2006/கு.வ.1,நாள் 23.6.2006.

**ஆணை**

2003–ம் ஆண்டு, சுற்றுப்புற சுகாதாரம் மற்றும் சமுதாயப் பங்கேற்புடன் கூடிய தூய்மையான கிராம இயக்கம்' என்ற திட்டம் தொடங்கப்பட்டு, இத்திட்டம் மத்திய அரசின் நிர்மல் கிராம புரஷ்கார் பரிசுத் திட்டத்திணைப் போன்று தூய்மை கிராம இயக்கம்' என அழைக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட 15 கிராம ஊராட்சிகளுக்குத் தலா ரூ.5 லட்சம் வீதம் பரிசும் தொகையாக வழங்கப்பட்டது.

2. மேலே படிக்கப்பட்ட கடிதம் இரண்டில், ஊரக வளர்ச்சி (மற்றும்) ஊராட்சி இயக்குநர் இவ்வாறு சிறந்த ஊராட்சிகளுக்கு 'சுகாதாரம்' எனும் ஒரே நோக்கத்திற்காக பரிசு வழங்குவதற்கு பதில் ஊராட்சியின் ஒட்டுமொத்த முன்னேற்றத்திற்காக மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளையும் அங்கீகரிக்கும் வகையில் அவற்றை கணக்கில் கொண்டு பரிசு வழங்கும் திட்டத்தினை அறிமுகப்படுத்துவதற் காக கருத்துவினை அனுப்பியுள்ளார். இத்திட்டத்திற்குக் கீழ்க்கானும் நடவடிக்கைகளுக்காக சிறந்த ஊராட்சி பரிசு ("Best Panchayat Award") என ஏற்படுத்தி வழங்கலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

மிகச் சிறந்த பணிகள் (Outstanding Works)

சிறந்த பூர்வாங்க பணிகள் (Special inltiatives)

முயற்சிகள் (Innovative efforts)

மேலும் மாற்று எரிபொருள் மின் அணு நிர்வாகம் உட்கட்டமைப்பு வசதிகள், திடக்கழிவு மற்றும் வருவாய் பெருக்கம் போன்ற துறைகளில் மிகச் சிறப்பாக பணியாற்றியுள்ள பல ஊராட்சி தலைவர்களையும் கருத்தில் கொண்டு ஊக்குவிக்கும் பொருட்டு புதிய பரிசுத் திட்டம் உருவாக்கப்படலாம் என்றும் அதன் மூலம் ஊராட்சித் தலைவர்களிடையே ஆரோக்கியமான போட்டி மனப்பான்மையை உருவாக்கவும், சிறந்த ஊராட்சிகளை ஊக்கப்படுத்தவும் இயலும் என்றும் இவ்வாறு வழங்கப்படும் இப்பரிசினை உள்ளாட்சி நிறுவனங்களுக்காக சீரிய முறையில் பணியாற்றிய குழுத்தலைவரின் ஒருவரின் பெயரால் அழைக்கலாம் என்றும் முன்மொழிகளை வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அனுப்பியுள்ளார்.

3.ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கருத்துருவிளை அரசு கவனமாக பரிசிலித்து, ஏற்கனவே நடைமுறையிலிருந்த தூய்மை கிராம பரிசுத் திட்டத்திற்குப் பதிலாக கிராமத்தில் ஒட்டு மொத்த முன்னேற்றத்திற்காக ஊராட்சியால் மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளையும் அங்கீகரிக்கும் வகையில் மாநிலத்தில் 15 சிறந்த கிராமங்களைத் தத்தெடுத்து அதற்கு 'சிறந்த ஊராட்சி பரிசு' என வழங்கப்படும் என்றும், நிதி நிலை அறிக்கையில் தூய்மை கிராம இயக்கப் பரிசுக்கென ஒதுக்கப்படடுள்ள ரூ.75 லட்சம் நிதியை இந்த திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்தும் அரசு ஆணையிடுகிறது மேலும் சிறந்த ஊராட்சிக்கு வழங்கப்படும் பரிசுத் திட்டம் மற்றும் தேர்வு முறை ஆகியன குறித்து கீழ்கண்டவாறு அரசு ஆணையிடுகிறது.

### மொழியப்படும் பரிசுத் திட்டத்தின் விவரங்கள்

1. இத்திட்டம் ஊராட்சிகளில் மேற்கொள்ளப்படும் மிகச்சிறப்பான பணிகளையும், சிறந்த பூர்வாங்கப் பணிகளையும் மற்றும் புதுமையான முயற்சிகளையும் ஊக்கப்படுத்தும் பரிசுத்திட்டமாக விளங்கும்.
2. இத்திட்டத்தில் தெரிவு பெறும் ஊராட்சிக்கு ஒரு நற்சான்றிதழ், ஒரு கேடயம் மற்றும், ரூபாய் 5 லட்சத்திற்கான வெகுமதியும் பரிசாக வழங்கப்படும்.
3. இத்திட்டத்தில் தெரிவு பெறும் ஊராட்சித் தலைவர்களுக்கு ஒரு நற்சான்றிதழ் மற்றும் ஒரு பதக்கம் வழங்கப்படும்

4. பரிசுக்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் தேவைப்படின் மறைவுக்குப் பின்னரும் இப்பரிசு வழங்குவதாக இருக்கும்

5. கடந்த ஐந்தாண்டு கால நடவடிக்கை மட்டுமே இத்திட்டத்திற்கு கணக்கில் கொள்ளப்படும்.

**முறை**

1. மாவட்ட ஆட்சித்தலைவர், திட்ட அலுவலர், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) மாவட்ட ஆட்சித் தலைவரால், நியமனம் செய்யப்படும் ஒரு அரசு சாரா நிறுவனம் மற்றும் தொடர்புடைய வட்டார வளர்ச்சி அலுவலர், (கிராம ஊராட்சி) ஆகியவர்களைக் கொண்ட குழு ஒன்றை ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவரும் அமைக்க வேண்டும். இக்குழு வட்டாரங்களிலிருந்து பெறப்படும் கருத்துருக்களை தெரிவு செய்யும்.

2. இம்மாவட்டக்குழு ஒவ்வொன்றும் குறிப்பான பரிந்துரையுடன் ஐந்து கருத்துக்களை ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

3. மாவட்டங்களிலிருந்து அனுப்பி வைக்கப்படும் ஐந்து கருத்துருக்களில் குறைந்தபட்சம் ஒரு கருத்துரு தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் தலைமை ஏற்கும் ஊராட்சிக்காகவும், ஒரு கருத்துரு மகளிர் தலைமை ஏற்கும் ஊராட்சிக்காகவும் இருந்தல் வேண்டும்.

4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், மாவட்ட குழுக்களிடமிருந்து பெறப்படும் கருத்துருக்களில் 45 கருத்துருக்களை தெரிவு செய்து அரசுக்கு அனுப்ப வேண்டும்.

5. பரிசு வழங்கப்படுவதற்காக மாநில அளவில் 15 ஊராட்சிகள் தெரிவு செய்யப்படும்.

6. இப்பரிசு வழங்கும் திட்டத்திற்கு ''உத்தமர் காந்தி விருது'' என்று பெயரிட்டு அழைக்க அரசு ஆணையிடுகிறது தூய்மை கிராம இயக்கப்பரிசுக்கென 2006–2007ம் ஆண்டிற்கான இடைக்கால நிதி நிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்டுள்ள ரூ.75 இலட்சம் தொகை இத்திட்டத்திறகுப் பயன்படுத்தப்படும்.

7. இந்த ஆணை நிதித்துறையின் அ.சா.கு.எண் 32262/RD, நாள் 30.8.2006ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க.அஷோக் வர்தன் ஷெட்டி**
அரசு செயலாளர்